# சிவகங்கை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண்.00099/அ1/ 2020 நாள்.09 /01/2020

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – திரு.சி.ஆறுமுகம், இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி, அண்டக்குடி – மித்ராவயல் – இளநிலை உதவியாளர் பதவியில் 01/06/2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – சார்பு

பார்வை:
1) அரசாணை எண்.101 பள்ளிக்கல்வித்துறை (வரவு செலவு – 1) துறை நாள்.18/05/2018
2) தேவகோட்டை மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.8473/அ1/2019 நாள். 03/01/2020
3) சிவகங்கை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் கடித ந.க.எண்.4466/ஆ7/2018 நாள்.24/10/2018

*** *** ***

சிவகங்கை மாவட்டம், அண்டக்குடி–மித்ராவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.சி.ஆறுமுகம் என்பவரது எஸ்.எஸ்.எல்.சி. கல்விச்சான்று பார்வை (3)ல் காணும் செயல்முறை ஆணையின்படி உண்மைத்தன்மை வாய்ந்தது எனச்சான்று வழங்கியதின் அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதியின்படி கீழ்க்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| பெயர் மற்றும் பதவி, அலுவலகம் | பிறந்த தேதி | இளநிலை உதவியாளரகாப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|
| திரு.சி.ஆறுமுகம்,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>அண்டக்குடி – மித்ராவயல்,<br>சிவகங்கை மாவட்டம். | 21/05/1983 | 01/06/2018 முற்பகல் | 01/06/2018 முற்பகல் |

<u>நிபந்தனைகள்</u>

01. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

02. தகுதிகாண் பருவ காலத்திற்கு முன் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

03. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

04. சம்பந்தப்பட்ட பணியாளர் பணியேற்ற நாளை உறுதி செய்து கொண்டு சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு

முதன்மைக்கல்வி அலுவலர்,
சிவகங்கை.

பெறுநர்:
திரு.சி.ஆறுமுகம்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
அண்டக்குடி – மித்ராவயல்,
சிவகங்கை மாவட்டம். (உரிய அலுவலர் மூலமாக)

நகல்:
1. மாவட்டக்கல்வி அலுவலர்,
தேவகோட்டை.
2. தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
அண்டக்குடி – மித்ராவயல்,
சிவகங்கை மாவட்டம்.

பாரா/அ1/2020